# *Church of the Assumption, PJ*

தவக்கால பிரச்சாரம் 5 வது வாரம் (ஆண்டு  பி)

நம்பிக்கையுடன் வாழுங்கள் :  நான், குடும்பம், சமூகம்

தவக்கால பிரச்சாரம் 2021

இன்று தவக்கால பிரச்சாரம் 5வது வாரம்

நற்செய்தி :  யோவான் 12 : 20 - 33

தன்  இறப்பைப்பற்றி  இயேசு கணிக்கிறார்

20 வழிபாட்டுக்காக திருவிழாவுக்கு வந்தோருள் கிரேக்கர் சிலரும்
இருந்தனர். 21 இவர்கள்  கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா  ஊரைச்சேர்ந்த
பிலிப்பிடம் வந்து, "  ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்"  என்று
கேட்டுக் கொண்டார்கள். 22 பிலிப்பு அந்திரேயாவிடம் வந்து அதைபற்றிச்
சொன்னார்; அந்திரேயாவும் பிலிப்பும் இயேசுவிடம் சென்று அதைத்
தெரிவித்தனர்.23 இயேசு அவர்களைப் பார்த்து, “மானிட மகன் மாட்சி பெற
வேண்டிய நேரம் வந்துவிட்டது. 24 கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா
விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை
அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். 25 தமக்கென்றே
வழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப்
பொருட்டாக கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். 26
எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும்
இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தோண்டு சேய்வோருக்குத்
தந்தை மதிப்பளிக்கிறார்” என்றார். 27 மேலும் இயேசு, “இப்போது என் உள்ளம்
கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்? ‘தந்தையே, இந்த
நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும்’ என்பேனோ? இல்லை!
இதற்காகத்தானே இந்நேரம்வரை வாழ்ந்திருக்கிறேன். 28 தந்தையே, உம்
பெயரை மாட்சிப்படுத்தும்” என்றார். அப்போது வானிலிருந்து ஒரு குரல்,
“மாட்சிப்படுத்தினேன்; மீண்டும் மாட்சிப்படுத்துவேன்” என்று ஒலித்தது. 29
அங்குக் கூட்டமாய் நின்று கொண்டிருந்த மக்கள் அதைக் கேட்டு, “அது
இடிமுழக்கம்” என்றனர். வேறுசிலர், “அது வானதூதர் ஒருவர் அவரோடு பேசிய
பேச்சு” என்றனர். 30 இயேசு அவர்களைப் பார்த்து, “இக்குரல் என் பொருட்டு
அல்ல, உங்கள் பொருட்டே ஒலித்தது. 31 இப்போதே இவ்வுலகு
தீர்ப்புக்குள்ளாகிறது; இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான்.32
நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால்
ஈர்த்துக்கொள்வேன்” என்றார். 33 தாம் எவ்வாறு இறக்கப்போகிறார்
என்பதைக் குறிப்பிட்டே இப்படிச் சொன்னார்.

துணைத்தலைப்பு : பிரதிபலிப்பு

எதிர்நோக்கும் புதிய வாழ்வு வளர அடி பணிவது நம்பிக்கைதான். உண்மையுள்ள வாழ்க்கைக்கு புதுப்பித்தல் முக்கியமானது என்பதை உணருங்கள்.

கவனம் (நடவடிக்கை)

புதுப்பிக்கபட்ட பார்வையில் எங்கள் எதிர்கால நட்பு.

கருத்து

வியத்தகு தருணங்களை இப்பகுதியில் காணலாம். இயேசுவின் மீது பரிசேயர்கள் பொறாமைக் கொண்டனர். யோவான் அதிகாரம் 11ல் இயேசு லாசரஸை உயிர்ப்பித்ததால், யூதர்கள் சினம் கொண்டனர். அதிகாரம் 12 ல் மேலே 11 ன் இறுதி பகுதியில் ; பரிசேயர்கள் கூச்சலிட்டனர். " பார்த்தீர்களா! தம் திட்டம் எதுவும் பயனளிக்கவில்லை. உலகமே அவன் பின்னே போய்விட்டது." வளர்ந்து வரும் இயேசுவின் புகழ்ச்சிக்கு பயந்த யூதர்கள் மிகைப்பட பேசினர். ஆலய வளாகத்தில் ஒருமுறை பணம் ஈட்டுவதற்காக வியாபாரம் செய்வதையும் ,பலியிட மிருகங்களையும் கொள்முதல் செய்வதையும் விற்பதையும் விரட்டி அடித்தார் இயேசு. ( யோவான் 2) இந்த சமயத்தில் கிரேக்கர்கள் இயேசு வைக்காண வந்தனர். இதனால், யூதர்களும் மற்றும் பிறஇனத்தாரும் இயேசுவைக் காணக் குவிந்தனர் .இதன் காரணமாக சபைகளும் குறைந்தன.

சுழற்சி முறையில் இயேசுவைக் காண, பிலிப்பிடம் செல்ல பின் ஆணட்றுவிடம் சென்றனர். ஆண்டவரின் சீடர்கள் அடையாளமே, தவிர மக்களை நம்மிடம் இழுப்பதற்கான நடவடிக்கையல்ல. குறிப்பாக மக்களை இயேசுவிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

இயேசுஅவர்களைப் பார்த்து "மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்திவிட்டது" கூறுகிறார்.

இயேசுவின புகழ்ச்சிக்காக இல்லை.

அவர் இறப்பதற்கான அடையாளமே. இது தோல்வியின் அடையாளமன்று மாறாக அவர் மகிமையால் உயர்த்தபடுவார்.

இறப்பைப்பற்றி ஒரு விதையின் வளர்ச்சியை ஒப்பிடுகிறார் இயேசு.

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்."

நாம் எப்படி இறப்போம் என காட்டுகிறது.

"தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர்.  இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்.

இது ஒரு முரணான சிந்தனை;  நாம் வாழும் வாழ்க்கையை அர்பணிக்கும் போது நாம் என்றும் வாழ்வோம்.

நான் இருக்கும் இடத்தில் என் தொண்டனும் இருப்பர்.  எனக்கு தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்.

இதன் பொருட்டு இக்கட்டான நிலையில் இருந்து இயேசு காப்பாற்ற படுவாரா? இயேசு கூறுகிறார் "  இந்த நேரத்திலிருந்து என்னை காப்பாற்றும்" இயேசுவுக்கு பதில் தெரியும். "இல்லை! இந்நேரம் வரை வாழ்ந்திருக்கிறேன்."

அவர் தன் பொறுப்பிலிருந்து பின்னடையவோ , தவிர்க்கவோ இல்லை. ஆண்டவரை மகிமைப் படுத்தவே வந்துள்ளார். ஆகவே ஆண்டவர் அவரை மகிமைப் படுத்துவார்." மாட்சிப்படுத்தினோர் மீண்டும் மாட்சிபடுத்துவேன்" என்றார்.

அங்கு இடியின் முழக்கம் ஒலித்தது. வானதூதர்கள் குரல் கேட்டது. அங்கு கருத்து  வேறு பாடு இல்லை.

இயேசு கூறியது, "  இக்குரல் என் பொருட்டு அல்ல.உங்கள் பொருட்டே ஒலித்தது. இப்போதே இவ்வுலகு தீர்ப்புக்குள்ளாகிறது;  இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தபடுவான் .நான் மண்ணிலிருந்து  உயர்த்தப்படுப் போது அனைவரையும்  என்பால்   காத்துக் கொள்வேன்."

இயேசு இறப்பைப்பற்றி இறுதியாக  இப்படி எடுத்துரைக்கிறார். அவர் நேருக்கு நேர் எதிர் கொள்ள தயாரானார்.  ஓடவோ , பறந்து செல்லவோ எத்தனிக்கவில்லை. கீழே படுத்து  தன் வாழ்வை விருப்பத்துடன் சரண் அடைகிறார்.

துணைத் தலைப்பு : கருத்து

புதிய வாழ்வுக்கு நமபிக்கை  ஒரு உந்துதல் ஆகும். உண்மையான வாழ்வுக்கு புதிய மாற்றம் அமைகிறது.

இங்கு,  நிறைய விஷயங்கள் பகிர படுகிறது. சிறியதாக  தியாக உணர்வைப் பற்றி பேசுகிறேன். நாம் பழைய வாழ்க்கை அணுகு முறை மேலும் நம் இறப்பை  பற்றி பேசுகிறேன். ஆண்டவரின் மகிமைக்காக ஒரே

சிந்தனையோடு நம் வாழ்வை அர்பணிக்க  வேண்டும்.  நாம் இறப்பை எதிர் கொள்ளவில்லை. எனினும் நமது லட்சியங்களுக்காகவே அதிக கவனம் செலுத்துகிறோம். இன்று, சகோதர சகோதரிகளே 5 வது தவக்காலத்தில் எதை நோக்கி போகிறோம்?எப்படி புதிய வாழ்வை அமைப்பது? நாம் அர்பணிப்பின்  மூலமாக புதிய வாழ்வை அமைக்க முடியும். இதுதான் உண்மை சகோதர சகோதரிகளே. குறிப்பாக நமது தேவாலயத்தில், ஏழைகளுக்கு உணவு வழங்குவதின் வழியாக பிற மத சகோதர சகோதரிகளுடன் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது.  நாம் இங்கு நம்பிக்கையுடன் ஒன்றினைந்து உள்ளோம். இந்த நிகழ்வு மிகவும் முக்கியமானது. பசியுற்றோர், குடியேறிகள், சமூகத்தின் விளிம்பில் அவதியுற்றோர் ஆகியவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறது.

முறையானஉணவு இல்லாதவர்க்கும், தேவைகளுக்கு குரல் எழுப்ப இயலாதவருக்கும் உதவி செய்ய முடிந்தது. புதுபிக்கப்பட்ட  பார்வையில் எதிர்கால நட்பை  பார்ப்போம். எதிர்கால நட்பை கண்டறிய  பரிசேயர்களைப் போல் பொறாமை கொள்ளக்  கூடாது. புகழ்ச்சியை நாடாமல் ஆண்டவரின் மீது கவனம் செலுத்துங்கள். பணிப்பெண்களை போல, எதிர்கால நட்பை கடைப்பிடிக்க  வேண்டும்.அப்படி என்றால் என்ன? எப்படி பிலிப்பும் ஆண்ட்ரூவும் கிரேக்கர்களை இயேசுவிடம் கொண்டு சென்றது  நினைவில் இருக்கிறதா? எதையும் நாமே, நம் கையில் எடுத்துக்  கொள்ளக் கூடாது என உணர்த்துகிறது.  நாமே உரிமை கொண்டாடக் கூடாது. நாம் நம்பிக்கைக்குரியவர்கள் என்பது திண்ணமாகும். எதிர்கால கணக்கை  சீராக எல்லா பொறுப்புகளையும் நம்பிக்கையுடன் கையாள வேண்டும்.தலைமுறையாக இது நம்பிக்கையுடன் தொடர வேண்டும். நமக்கு நாமே வைத்து  கொள்ள கூடாது. சுயநலம் இல்லாமல் கெட்டதை  விட்டு நல்லவற்றை எடுத்துக் கொள்வோம்.

காடுகள் ,பல்லுயிர்  நிலமை என்னவாயிற்று  என்று பாருங்கள். தீயில் எல்லாம் அழிந்து வீணாகி விட்டது. நம்பிக்கையற்றவர்களாக   நாம் மாறியதால் தான் இவ்வாறு நடந்தது.  முழு உரிமையாளராக இருந்தும் நம்கிக்கையற்றவர்களானதால் இவ்வாறு நடந்தது. சுயநலமே நம்மை சித்த பிரமையில் ஆழ்த்தியது. பல்லுயிர்களை பாதுகாக்க சிறந்த  வழியில் கற்று வழி நடத்துவோமாக. இவ்வுலகில்  பொறுப்புடன் நம் தலைமுறையை பாதுகாப்போம். ஆண்டவருக்கே புகழ் !

## அன்னை  மரியா விண்ணேற்பு  தேவாலயம்

www.assumptionpj.org  AssumptionPJ  ChurchoftheAssumptionPJ